| | |
|---|---|
| பள்ளிக்கல்விஇணைஇயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை-06<br>முன்னிலை : முனைவர்.பூ.ஆ.நரேஷ்<br>ந.க.எண்8101/வி1/இ2/2019 நாள்: 02-01-2021 | |
| பொருள் | தமிழ்நாடு கல்விசார்நிலைப்பணி – 2019ஆம் ஆண்டிற்கான கணினி பயிற்றுநர் நிலை-1 காலிப்பணியிடங்கள் – நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தெரிவு செய்யப்பட்ட தேர்வாளர்கள் பட்டியல் ஆசிரியர் தேர்வுவாரியத்திடமிருந்து பெறப்பட்டது – பணிநாடுநருக்கு பணிநியமன ஆணை வழங்குதல் – சார்ந்து. |
| பார்வை | 1. அரசாணை(நிலை)எண்.834,கல்வி(VE)த்துறை,நாள்: 3.09.1994.<br>2. அரசாணை(நிலை)எண்.7,கல்வி(VE)த்துறை,நாள் : 04.01.2000.<br>3. அரசாணை(நிலை)எண்.65, பணியாளர்மற்றும்நிருவாகசீர்த்திருத்த(M)த்துறை, நாள்: 02.07.2014<br>4. அரசாணை(நிலை)எண்.144,பள்ளிக்கல்வி(ப.க.2(1))த்துறை, நாள் : 29.06.2017.<br>5. அரசாணை(நிலை)எண்.101,பள்ளிக்கல்வி(Bud-1)த்துறை, நாள் : 18.05.2018.<br>6. அரசாணை(நிலை)எண்.26,பள்ளிக்கல்வி(ப.க.7(1))த்துறை, நாள் : 12.02.2019.<br>7. சென்னை-6, ஆசிரியர்தேர்வுவாரியஉறுப்பினர்செயலரின்கடிதம், ந.க.எண்.8019/E6/2018, நாள் : 30.12.2020 |

2019ஆம் ஆண்டிற்கான கணினி பயிற்றுநர் நிலை-1(முதுகலை ஆசிரியர் நிலை) காலிப்பணியிடங்களுக்கு பார்வை(7)ல் கண்ட கடிதத்தின்படி ஆசிரியர் தேர்வுவாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள கீழ்குறித்த தேர்வாளருக்கு தமிழ்நாடு கணினி பயிற்றுநர்களுக்கான தற்காலிக பணிவிதிகளின் படியும், பார்வை(6)ல் கண்ட அரசாணையின் படியும், கணினிபயிற்றுநர் நிலை-1 பணியிடத்தில் அவரது பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் தற்காலிகமாக பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என்றும், தனியர் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிக்கு உரிய கல்வித் தகுதியை பெற்றுள்ளாரா என்பதையும் மற்றும் தகுதியானவரா என்பதையும் உறுதி செய்த பின்னர் இவரது கல்விச் சான்றுகளின் உண்மைத் தன்மைக்குட்பட்டு பணி வரன்முறை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

| ஆசிரியர் தேர்வுவாரிய பட்டியல் வரிசை எண் /<br>பெயர் மற்றும் முகவரி.<br>Roll No and Address | பாடம் |
|---|---|
| Roll No : 19PGCI2500059<br><br>Address : SATHISHKUMAR M<br>S/O M.MANICKAM<br>3/152<br>MOTTUR | கணினிபயிற்றுநர் நிலை-1 |
| நியமனம் செய்யப்படும் பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | |
| GOVERNMENT BOYS HIGHER SECONDARY SCHOOL, VEERAGANUR<br>(33080703007)<br>SALEM; | |

1. தேர்வாளர் நியமனம் செய்யப்பட்டபள்ளியில்பணியிடம் காலியாகவுள்ளதா என்பதை உறுதி செய்த பின்பு தான் தேர்வாளரை பணியில் சேர தலைமையாசிரியர் அனுமதிக்கவேண்டும்.
2. தேர்வாளர் பணியில் சேரும்போது சிவில் சர்ஜன் தகுதிக்கு குறையாத தகுதியுடைய மருத்துவ அலுவலரிடம் உடற்தகுதிச் சான்றினை உரியபடிவத்தில் பெற்று தலைமையாசிரியரிடம் அளித்தல் வேண்டும். இதனை அன்னாரது பணிப்பதிவேட்டில் பாதுகாப்பாக இணைத்துக் கொள்ள தலைமையாசிரியர் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
3. மேற்கண்டவாறு நிரப்பப்படும் கணினி பயிற்றுநர் நிலை-1 பதவிக்கான (முதுகலை ஆசிரியர் தரத்தில்) சாதாரண நிலையில் ஊதிய விகிதம் அரசாணை எண்.303 நிதி(ஊகு) துறை, நாள்.11.10.2017-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஊதியவிகிதத்தின்படி அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
4. தேர்வாளர் வேறு அரசுப் பணியிலோ, அரசுச் சார்ந்த நிறுவனங்களிலோ தற்போது பணியாற்றிக் கொண்டிருப்பின், உரிய அலுவலரிடமிருந்து முறையான பணிவிடுப்புச்சான்று பெற்று அதனை சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரிடம் முன்னிலைப்படுத்தி பணியில் சேருதல் வேண்டும்.

5. உயர்நிலை பள்ளிப் படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாதவர்களுக்கும், தமிழ் அல்லாது பிறமொழிகளை பட்டப்படிப்பில் பயின்றவர்களுக்கும் அல்லது பட்டப்படிப்பில் பிறமொழி பயின்றவர்கள் தமிழ்வழிபாடத்திற்கென ஆசிரியர் தேர்வுவாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின், அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி இரண்டாம் நிலைத் தேர்வில், பணியில் சேர்ந்த இரண்டாண்டுகளுக்குள் தேர்ச்சி பெறவேண்டும்.
6. தமிழ்நாடு கல்விசார்நிலை பணிவிதியின்படி பணிவரன் முறைப்படுத்தப்படும் நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலம் தகுதி காண பருவத்தை முடிக்க வேண்டும்.
7. மாற்றுத் திறனாளி (Physically Challanged) தேர்வாளர் அவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தனிவேலைவாய்ப்பு அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட மருத்துவக்குழுவிடமிருந்து உடல்நலத் தகுதிச்சான்று பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.
8. தேர்வாளர் பணியில் சேர்ந்த பின்னர் "பங்களிப்புஓய்வூதியத்திட்டத்தின்கீழ்" (Contributory Pension Scheme) கொண்டுவரப்படுவார்.
9. ஆசிரியர் தேர்வுவாரிய அறிவிப்பாணை எண்.09/2019, நாள்.01.03.2019-ல் தெரிவித்துள்ளபடி தனியர் கணினிபயிற்றுநர் நிலை-1(முதுகலைஆசிரியர்நிலை) பதவிக்குத் தெரிவுசெய்யப்படுகிறாரோ அப்பாடத்திற்கான கல்வித்தகுதிகளை பெற்றுள்ளாராஎன்றுசரிபார்க்குமாறும்,தேர்வாளரது பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்புமற்றும் பட்டயச்சான்றுகளின் உண்மைத்தன்மை அறியவும், பிறமாநில பத்தாம்வகுப்பு, பன்னிரெண்டாம்வகுப்பு மற்றும் பட்டயச் சான்றுகள் பெற்றிருப்பின், அவற்றை மதிப்பீடுசெய்யவும், உரியநடவடிக்கைகளைத் தலைமையாசிரியர் உடன் மேற்கொள்ளவேண்டும்.
10. மேலும், பணிநியமனம் பெற்றுள்ள தனியர் முன்னிலைப்படுத்திய கல்விச்சான்றிதழ்கள் உண்மையானவை அல்ல என்றோ, விதிகளின்படி மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ கண்டறியப்பட்டால், தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்துசெய்யப்படும்.
11. தேர்வாளர் பணியில் சேரும்போது அன்னார் கணினிபயிற்றுநர் நிலை-1 (முதுகலைஆசிரியர்நிலை)பணிக்குரிய கல்வித் தகுதியினைப் பதிவுசெய்துள்ள வேலைவாய்ப்பகப் பதிவுஅட்டையினை இரத்துசெய்யும்பொருட்டு சார்ந்த மாவட்டவேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு முதன்மைக்கல்வி அலுவலருக்குத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அதன் விவரத்தை இவ்வியக்ககத்திற்கு உடன் அனுப்பவேண்டும்.
12. தேர்வாளர் பற்றிய தகவல்ஏதேனும் பள்ளிக்கல்வி இயக்குநருக்கு தெரிவிக்கும்போது ஆசிரியர் தேர்வுவாரியத்தால் அளிக்கப்பட்ட வரிசைஎண் மற்றும் ஆண்டு தவறாது குறிப்பிடுதல்வேண்டும். மேலும் அன்னார் பணியேற்ற தேதியை உடன் சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலருக்கு சம்பந்தப்பட்ட அரசு/நகராட்சிமேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் தெரிவிக்கவேண்டும்.
13. பணியில் சேர்ந்துள்ள கணினிபயிற்றுநர் நிலை-1 சார்ந்த விவரங்களை உடன் கல்வித்தகவல் மேலாண்மையில் (EMIS) சார்ந்த பள்ளித் தலைமைஆசிரியர் பதிவேற்றம் செய்யவேண்டும்.
14. இந்நியமனஆணை கிடைக்கப்பெற்ற தேர்வாளர் ஏழு தினங்களுக்குள் பணிநியமனம் பெற்ற பள்ளியில் தவறாமல்பணியில்சேரவேண்டும். அவ்வாறு ஏழுதினங்களுக்குள் பணியில் சேரவில்லை எனில் நியமன ஆணை தாமாக வேரத்தாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(தொழிற்கல்வி)

முதன்மைக் கல்வி அலுவலர்.
முதன்மை கல்வி அலுவலர்
சேலம் - 636 001

பெறுநர்
சம்பந்தப்பட்ட தேர்வாளர்
நகல் : உரிய அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்.
நகல்
முதன்மைக் கல்வி அலுவலர், சேலம்